DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| SC No. | : | 152/2016 |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | பாண்டி |
| Father's Name | : | வேலுச்சாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.02.2025

**முதல் விசாரணை:** **(1 எதிரி ஆஜர் 2 எதிரி ஆஜர் இல்லை குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

நான் தேவகோட்டையில் செங்கற்கோவிலில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் ஏற்கனவே தமிழ்நாடு தீயணைப்பு மீட்பு பணித்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது. போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை:**

1. கடந்த 08.12.2014ம் தேதி காலை 9.30 மணியளவில் ஆசிரியை சபிதா கோஷ் என்பவர் பாரதி வேலாங்குளம் பள்ளிக்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருக்கும் போது எழுவங்கோட்டை மணிமுத்தாறு மண்பாதையில் சென்ற போது திருடர்கள் இரண்டு பேர் கத்தியைக் காட்டி மிரட்டி 2 கிராம் எடையுள்ள தோட்டை பறித்து சென்றது தொடர்பாக வேலாயுதப்பட்டிணம் காவல் நிலைய குற்ற எண் 14/2014 இதச பிரிவுகள் 392 மற்றும் 397 என்ற வழக்கின்

சம்பவ இடத்தை தேவகோட்டை தாலுகா காவல் ஆய்வாளர் பார்வையிட்டு அன்றைய தினம் மதியம் 2.17 மணிக்கு மாதிரி வரைபடம் மற்றும பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றும் அதில் நானும், காண்டீபன் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்று போலீஸார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.